Judicial Form No. 53

(Sec Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

.IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, KRISHNAGIRI

Calendar .. ..
Miscellaneous .. ..
Preliminary Register .. .. CC.No. 314 /2022
Deposition of witness for PW 4

Name : மகாலிங்கம்
Fathers Name / Husband :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act X of 1969 (Central Act 44 of 1969 on the day 25th of July 2023.

(A1 Present, A2,A3,A4 Absent PFA)

எதிரி தரப்பில் மனுதாக்கல் செய்யப்பட்டதின் பேரில் குறுக்கு விசாரணை:

சுரேசின் வீட்டு முன்னால் பாதையை நாங்கள் சரிசெய்தபோது எதிரி வந்து கேட்டதால் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான், அது புறம்போக்கு இடம். அந்த இடம் புறம்போக்கு இடம் என்பதற்கு ஆவணம் எதாவது நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேனா என்றால் சமர்பித்துள்ளேன். அதுபோல் ஆவணம் எதுவும் சமர்பிக்கவில்லை என்றால் சரியல்ல. சுரேஷ் தடுக்க வந்தபோது நாங்கள் அவரை அடித்தோம் என்றால் சரியல்ல. நாங்கள் எதிரியை அடித்தோம் என்றாலும், அதனால் காவேரிப்பட்டணம் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்து புகார் கொடுத்து குற்ற எண்.598/2022 பதிவு செய்தார்கள் என்றால் வழக்கு போட்டார்கள். என்னிடம் காட்டப்படும் முதல் தகவல் அறிக்கை எங்கள் மீது போடப்பட்டது என்றால் சரிதான். (அது எ.சா.ஆ.1-ஆக குறியீடு செய்யப்படுகிறது.) இதேபோல் 2007-ம் வருடம் நாங்கள் பிரச்சனை செய்து எங்கள் மீது வழக்கு போட்டார்கள் என்றால் சரியல்ல. போலீசார் விசாரித்து சிவில் வழக்கு என்பதால் சிவில் நீதிமன்றத்தில் பார்த்து கொள்ள சொன்னதால் எதிரிகள் எங்கள் மீது அசல் வழக்கு எண்.128/2010 தாக்கல் செய்தார்கள் என்றால் சரியல்ல. அந்த வழக்கில் எதிரிகளுக்கு சாதகமாக தீர்ப்பு ஆனது என்றால் சரியல்ல. எதிரியை நாங்கள் அடித்து அவர் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்த பிறகு நாங்கள் சிகிச்சைக்கு சேர்ந்து பொய்

புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. எதிரிக்கு சொந்தமான நிலத்தை நாங்கள் கல் கட்டியதால் தட்டிகேட்ட அவரை நாங்கள் தாக்கிவிட்டு எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல, புறம்போக்கு இடத்தில் நாங்கள் கல் கட்டியபோது அவர்கள் பிரச்சனை செய்தார்கள். தற்போதும் எதிரிகள் எங்கள் மீது சார்பு நீதிமன்றத்தில் 192/2022 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான், ஆனால் இந்த இடத்திற்காக இல்லை. சிவில் வழக்கு போட்டதால் எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH

Digitally signed by K KARTHICK ASATH
Location: JUDICIAL MAGISTRATE NO.I KRISHNAGIRI